## 21. மரண பள்ளத்தாக்கில் நான்

**பல்லவி**

மரண பள்ளத்தாக்கில் நான் நடந்தாலும்
பயமில்லையே எனக்கு பயமில்லையே
உங்க கோலுண்டு உங்க தடியுண்டு
உம்மை போல என்னை காக்க யாருமில்லையே

**அனுபல்லவி**

*என் இயேசய்யா என் இயேசய்யா – 2*

**சரணங்கள்**

1. மலைகள் விலகினாலும்
கன்மலை பெயர்ந்தாலும்
உங்க கிருபை விலகாதையா
உங்க இரக்கம் முடிவில்லாதையா
- என் இயேசய்யா

2. தீங்கு நாட்களில்
கூடார மறைவினில்
என்னை ஒளித்து மறைத்தீரையா
கன்மலைமேல் என்னை நிறுத்தினீரைய்யா
- என் இயேசய்யா

3. மரண கண்ணிக்கு
மரண கட்டுக்களுக்கு
என்னை தப்புவித்து காத்தீரையா
வழுவாமல் பாதுகாத்து வருகின்றீரைய்யா
- என் இயேசய்யா